இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"ஏனெனில், திருஅவையில்தான் இயேசு அவர்களுக்கு உணவையும் நட்பையும் தருகிறார்; விடியலையும், நம்பிக்கையின் எல்லையையும் காட்டுகிறார்; ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைத்து, அவர்களின் இழந்த மாண்பை மீட்டெடுக்கிறார்."

# உலகளாவிய வறியோரின் நாள்



10-வது உலகலாவிய வறியோரின் நாளை முன்னிட்டு திருத்தந்தை 14-ஆம் லியோ விடுத்துள்ள செய்தியில், கடவுள் "ஏழைகளின் புகலிடமாய்" இருக்கிறார் என்பதை ஆழமாகப் பிரதிப்பலிக்கிறார். கிறிஸ்தவர்களாகிய நாம் நம் வாழ்வில் ஏழைகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்றும், நீதி, சகோதரத்துவம் மற்றும் மனித மாண்பு ஆகியவற்றில் நமக்கிருக்கும் கடமைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

"ஆண்டவரே ஏழைகளின் புகலிடம்" என்ற திருப்பாடல் 14-ஐ மையமாகக் கொண்டு திருத்தந்தை உரை ஆற்றினார். எருசலேம் தேவாலயம் இடிக்கப்பட்டு, மக்கள் கடவுளின் பிரசன்னத்தை இழந்து, சொல்லொணா வறுமையிலும் மனவேதனையிலும் தவித்த ஒரு இக்கட்டான காலகட்டத்தில் இந்தத் திருப்பாடல் எழுதப்பட்டது என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

புனித அந்தோனியாரின் திருவிழா நாளான ஜூன் 13-ஆம் தேதியிட்டு, கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியான இச்செய்தியில், திருப்பாடல் 14 இன்று வாழும் தலைமுறைக்கும் ஏற்றதாக இருக்கிறது என்று திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார்.

இதன் ஆரம்ப வரிகள், ஞானத்தோடு வாழ்பவர்களுக்கும், "தங்களை விட உயர்ந்த சக்தி எதுவும் இல்லை" என்று திமிரோடு வாழ்பவர்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் காட்டுகிறது. "வருத்தத்திற்குரிய விடயம் என்னவென்றால், அதிகார வர்க்கத்தின் ஊழல்களால் இன்றும் சமூக அநீதி பரவலாகக் காணப்படுகிறது. இது மிகவும் கண்டிக்கத்தக்கதும், மக்களைப் பிரித்தாளும் கொடுமையுமாகும்," என்று திருத்தந்தை எழுதியுள்ளார்.

### ஏழைகளின் அழுகுரல் நசுக்கப்படக் கூடாது

சமூக அநீதியின் முதல் பாதிப்பு ஏழைகளையே தாக்குகிறது என்றும், இதனால் பல சமுதாயங்களில் ஏழைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்றும் திருத்தந்தை சுட்டிக்காட்டுகிறார்.

மக்களின் உள்ளத்தில் கடவுள் இல்லாதபோது, அவர்கள் ஒருவரையொருவர் மதித்து வாழ்வதில்லை. மாறாக, ஒருவரை ஒருவர் அடக்கி ஆளவும், ஒடுக்கவும் பார்க்கிறார்கள். மேலும், ஏழைகளின் அழுகுரல் பல தந்திரமான வழிகளில் மௌனமாக்கப்பட்டு விடுகிறது என்றும், இன்றைய டிஜிட்டல் (இணையதள) உலகம் அவர்கள் மீதான தப்பெண்ணங்களையும், சமூகத்தின் பாராமுகத்தையும் இன்னும் அதிகமாக்குகிறது என்றும் திருத்தந்தை எச்சரித்தார்.

"ஏழைகளுக்குக் கடவுளிடம் அழுவதைத் தவிர வேறு வழியில்லை. கடவுள் உண்மையுள்ளவர், இரக்கம் நிறைந்தவர் என்பதால், அவர் தங்கள் குரலைக் கண்டிப்பாகக் கேட்பார் என்ற முழு நம்பிக்கையோடு அவர்கள் தங்களைக் கடவுளிடம் ஒப்படைக்கிறார்கள்."


இன்றைய கால வறுமையைக் குறித்துப் பேசிய திருத்தந்தை, "நம் காலத்து ஏழைகள் மறக்கப்பட்டவர்களாகவும், ஓரங்கட்டப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் உணவை மட்டுமல்ல, தங்களின் குரலையும், முகவரியையும் கூட இழந்து நிற்கிறார்கள்" என்கிறார்.

எனவே, கிறிஸ்தவர்கள் மூலமாகவும், திருஅவையின் வழியாகவும் அவர்கள் கிறிஸ்துவைச் சந்திக்க வேண்டும் என்று அவர் ஜெபித்தார். "ஏனெனில், திருஅவையில்தான் இயேசு அவர்களுக்கு உணவையும் நட்பையும் தருகிறார்; விடியலையும், நம்பிக்கையின் எல்லையையும் காட்டுகிறார்; ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைத்து, அவர்களின் இழந்த மாண்பை மீட்டெடுக்கிறார்."

கிறிஸ்தவர்களாகிய நாம் கடவுளிடம் புகலிடம் தேடுவது மட்டுமல்லாமல், நாமே "ஏழைகளின் புகலிடமாக மாற வேண்டும்" என்று திருத்தந்தை வலியுறுத்துகிறார்.

தமிழாக்கம் ஹெரால்டு

# திருத்தந்தை லியோ ஏன் மனநலம் குறித்து மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்?



மனநலம் என்பது பெரும்பாலான மக்கள் திருத்தந்தையின் உரைகளோடு தொடர்புபடுத்திப் பார்க்கும் ஒரு தலைப்பு அல்ல. ஆனால், கடந்த சில வாரங்களாகத் திருத்தந்தை லியோ இந்த விடயத்தை மீண்டும் மீண்டும் பேசி வருகிறார். ரோம் நகரின் 'லா சபியென்சா' (La Sapienza) பல்கலைக்கழக மாணவர்கள் முதல், ஸ்பெயின் நாட்டிற்கு அவர் மேற்கொண்ட பயணத்தின் போது கூடியிருந்த இளைஞர்கள் வரை, வெவ்வேறு சூழல்களில், வெவ்வேறு தரப்பு மக்களிடம் அவர் இத்தலைப்பைக் குறித்துப் பேசியுள்ளார். அவர் ஒருபோதும் இந்தச் சிக்கலை ஒரே கோணத்தில் அணுகுவதில்லை.

'லா சபியென்சா' பல்கலைக்கழகத்தில் பேசிய திருத்தந்தை, "இன்றைய இளைஞர்களில் பலர் மிகுந்த பதற்றத்தினால் (Anxiety) பாதிக்கப்பட்டுள்ளனர். இதை ஒரு தற்காலிகப் பிரச்சனை என்று கடந்து போய்விடாமல், நாளுக்கு நாள் சிக்கலாகி வரும் இந்த உலகத்தை மாணவர்கள் எதிர்கொள்ளக் கல்வியாளர்கள் அவர்களுக்குத் துணையாக இருக்க வேண்டும். உங்கள் மாணவர்கள் மீது நம்பிக்கை வைப்பது மிக மிக முக்கியமானது," என்றும் அவர் வலியுறுத்தினார்.

சில வாரங்களுக்குப் பிறகு பார்சிலோனாவில் லட்சக்கணக்கான இளைஞர்கள் கலந்துகொண்ட ஒரு மாலை நேர வழிபாட்டின் (Vigil) போது, ஒரு இளம் பெண் தனக்கு ஏற்பட்ட மனச்சோர்வு (Depression) குறித்தும், வாழ்க்கை சுமையாக மாறும் போது அதன் அர்த்தத்தைத் தேட தான் எவ்வளவு போராடினார் என்பது குறித்தும் திருத்தந்தையிடம் வெளிப்படையாகப் பேசினார்.

அதற்குப் பதிலளித்த திருத்தந்தை "மிகவும் கடினமான, வேதனைமிக்க சூழ்நிலைகளில், கடவுள் நம்மை விட்டு மறைந்துவிட்டது போலத் தோன்றும் போது, நம் இதயத்தில் சுமக்கும் பாரங்களை நாம் மீண்டும் அவரிடமே ஒப்படைக்க வேண்டும். யோபுவைப் போல நாம் கடவுளிடம் கதறி அழலாம், அவரிடம் நம் ஆதங்கத்தை முறையிடலாம் (வாதாடலாம்). ஏனெனில், கடவுள் மௌனமாக இருப்பது போல் தோன்றினாலும், அவர் ஏதோ ஒரு வழியில் நம் அருகில் இருக்கிறார் என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும்."

"ஆனால், இதை நாம் தனி ஆளாகச் செய்ய முடியாது என்று நான் நம்புகிறேன்." இந்த ஒரு எளிய வாக்கியம்தான், திருத்தந்தையின் இந்த ஆரம்பக்கால பணியின் (Pontificate) மிக உன்னதமான அணுகுமுறையை நமக்கு வெளிப்படுத்துகிறது.

இதனால்தான், மனநலம் குறித்த திருத்தந்தை லியோவின் அணுகுமுறை இவ்வளவு மதிப்புமிக்கதாகத் தோன்றுகிறது. மனநலனை ஒரே ஒரு குறுகிய வட்டத்திற்குள் சுருக்கிவிடாமல், பல்வேறு கோணங்களில் இருந்து அவர் அதை அணுகுகிறார். ஒரு நாள் கல்வியைப் பற்றிப் பேசுகிறார்; மற்றொரு நாள் சமூகத்தைப் பற்றிப் பேசுகிறார். பின்னர் தொழில்நுட்பம், வாழ்வின் நோக்கம், தனிமை, விசுவாசம் அல்லது உறவுகளைப் பற்றிப் பேசுகிறார். இவையெல்லாம் ஒன்று என்பதால் அல்ல, மாறாக மனிதர்கள் நாம் அனைவரும் பல்வேறு உணர்வுகளின் கலவை; அதேபோல நாம் சுமக்கும் போராட்டங்களும் விவரிக்க முடியாதவை என்பதை அவர் புரிந்து வைத்துள்ளார்.

ஒரு கடினமான பிரச்சனை வரும்போது, அதற்கு யாராவது ஒருவரைப் பழிசுமத்த (பலிகடா ஆக்க) பார்ப்பது மனித இயல்பு. இக்காலத்தில், சமூக ஊடகங்களும் (Social Media) ஸ்மார்ட்போன்களும் தான் இதற்குப் பெரும் காரணங்களாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றன. இருப்பினும், குடும்பப் பிரிவுகள், படிப்பின் சுமை, தனிமை, பொருளாதார நெருக்கடிகள், உலகளாவிய அரசியல் சூழல்கள், மற்றும் வாழ்வின் நோக்கத்தையோ அல்லது விசுவாசத்தையோ இழப்பது போன்ற பல காரணங்கள் மனிதரின் பதற்றத்திற்கும் மனவேதனைக்கும் வழிவகுக்கின்றன. பேசுபவர்களின் பார்வையைப் பொறுத்து, இதில் ஏதாவது ஒன்றுதான் ஒட்டுமொத்தப் பிரச்சனைக்கும் காரணம் என்று கூறப்படலாம்.

ஆனால், மனிதர்களையோ அல்லது அவர்களின் போராட்டங்களையோ நாம் அவ்வளவு எளிதாக வகைப்படுத்திவிட முடியாது. "இதுதான் சிக்கல்!" என்று எதையேனும் ஒன்றை மட்டும் நம்மால் விரல் நீட்டிக் காட்டிவிட முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! ஆனால், உண்மை என்னவென்றால் வாழ்க்கை அதைவிட மிகவும் சிக்கலானது. துன்பப்படுபவர்களின் வாழ்வில் அவர்களோடு உடனிருப்பவர்களைக் (Accompanying) குறித்துப் பேசிய அவர், நமக்கு ஏற்படும் அந்த வேதனையை அவசர அவசரமாக விளக்கித் தீர்க்கப் பார்க்காமல், நமக்கு உதவக்கூடிய மனிதர்கள் தான் நமக்குத் தேவை என்று கூறினார்.

எல்லாப் போராட்டங்களையும் உடனடியாகத் தீர்த்துவிட முடியாது; எல்லாக் காயங்களுக்கும் எளிதாகக் காரணம் சொல்லிவிட முடியாது. சில நேரங்களில், துன்பப்படுபவர் அருகே அமைதியாக தங்கி, அவர்கள் சொல்வதைக் காதுகொடுத்துக் கேட்டு, அவர்களோடு தங்களது பாதையைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு மனிதராக இருப்பதுதான், நாம் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய மிகப் பெரிய கொடை.

தமிழாக்கம் ஹெரால்டு

# அமெரிக்க-ஈரான் ஒப்பந்தத்தை வரவேற்கும் திருத்தந்தை லியோ

மத்திய கிழக்கில் அமைதி நிலவ வேண்டும் என்ற தனது விருப்பத்தை வெளியிட்ட திருத்தந்தை லியோ XIV, அமெரிக்காவும் ஈரானும் ஒரு முக்கிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஆயத்தமாகி வரும் வேளையில், உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருமாறும் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த புதன்கிழமை அன்று நடைபெற்ற தனது வாராந்திர பொது மறைக்கல்வி உரையின் போது (General Audience), அமெரிக்காவும் ஈரானும் தொடர்ந்து பேச்சுவார்த்தை மற்றும் ஒத்துழைப்புப் பாதையில் பயணிக்க வேண்டும் என்று திருத்தந்தை லியோ XIV வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த நான்கு மாதங்களாக நீடித்த போருக்குப் பிறகு, இரு நாடுகளும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (Memorandum of Understanding) கையெழுத்திட உள்ளன.

இது குறித்துப் பேசிய திருத்தந்தை, "ஈரான் இஸ்லாமியக் குடியரசுக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் இடையே எட்டப்பட்டுள்ள இந்த ஒப்பந்தத்தை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். பொறுமையான பேச்சுவார்த்தை மற்றும் கலந்தாலோசனைகளின் ஊக்கமளிக்கும் பலனாக உள்ளது" என்று கூறினார். மேலும், இந்த அமைதிப் பேச்சுவார்த்தைகள் தடையின்றி நடைபெற உதவியாக இருந்த பிற நாடுகளுக்கும் திருத்தந்தை தனது நன்றியைத் தெரிவித்தார்.

"இந்த ஒப்பந்தம் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பரஸ்பர நம்பிக்கை, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை வலுப்படுத்த உதவ வேண்டும் என்றும், மக்களிடையே உரையாடல் மற்றும் ஒத்துழைப்புக்கான வழிகளை ஊக்குவிக்க வேண்டும் என்றும் நான் நம்புகிறேன்" என்று அவர் கூறினார்.

முன்னதாக, கடந்த பிப்ரவரி 28 அன்று, அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரானின் அணுசக்தி மற்றும் ஏவுகணைத் தளங்களைக் குறிவைத்து வான்வழித் தாக்குதல்களை நடத்தின. இதற்குப் பதிலடியாக, ஈரான் நாடு இஸ்ரேல் மற்றும் வளைகுடாப் பகுதியில் உள்ள அமெரிக்கப் படைகளின் தளங்கள் மீது எதிர்த்தாக்குதல் நடத்தியதுடன், ஹார்முஸ் நீரிணை வழியாகச் செல்லும் கப்பல் போக்குவரத்தையும் பாதிப்புக்குள்ளாக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

உக்ரைன் நாட்டின் நகரங்களைக் குறிவைத்து ரஷ்யா தனது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ள நிலையில், அங்குப் பலியாகும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறித்து திருத்தந்தை லியோ தனது ஆழ்ந்த வேதனையைத் தெரிவித்தார்.

"அப்பாவிகள் பலர் பலியாகியுள்ளனர்; மீட்புப் பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்; தேவாலயங்களும் கலாச்சார பாரம்பரிய இடங்களும் தீக்கிரையாக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. தங்கள் அன்புக்குரியவர்களை இழந்து தவிக்கும் அனைவருக்கும், காயமடைந்தவர்களுக்கும், வன்முறைக்கு மத்தியிலும் துணிவோடு உயிர்களைக் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் நான் எப்போதும் உங்களோடு அரணாக (செபத்தில்) துணையாக இருக்கிறேன்" என்று திருத்தந்தை கூறினார்.

மேலும், உக்ரைன் போர் முடிவுக்கு வர அனைவரும் இணைந்து செபிக்குமாறு திருத்தந்தை லியோ XIV அழைப்பு விடுத்தார்.

தமிழாக்கம் ஹெரால்டு

# பினாங்கில் அருங்கொடை மறுமலர்ச்சி எழுச்சிக் கூட்டம்



பினாங்கு. புக்கிட் மெர்த்தாஜாம்.

பினாங்கு மறை மாவட்டத்தின் கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சி எழுச்சி கூட்டத்தில் நான்கு மொழி பேசும் இனத்தவர்கள் முதன்முறையாக கலந்து கொண்டு தூய ஆவியின் அருளைப் பெற்றனர். தமிழ், ஆங்கிலம்,சீனம், தேசிய மொழிகளில் அருங்கொடை எழுச்சி கூட்டம் புக்கிட் மெர்த்தாஜாம் புனித அன்னாள் மைனர் பசிலிகா திருத்தலத்தில் நடைபெற்றது.

எல்லாம் வல்ல இறைவனைப் போற்றிப் புகழ் ஆராதனை நான்கு மொழிகளில் நடைபெற்றது. ஜெப ஆராதனையின் துவக்கத்தில் எக்காளம் ஊதி அரசருக்கெல்லாம் அரசரான கிறிஸ்து வரவேற்கப்பட்டார். பினாங்கு மறை மாவட்டத்தில் உள்ள அருங்கொடை ஜெபக்குழுத் தலைவர்கள் கொடிகளை ஏந்தி பவனியாக ஆலயப் பீடத்திற்கு முன் ஆரவாரத்துடன் வந்து நின்றனர்.

பினாங்கு மாநிலத்தின் 'காரிஸ்' (CHARIS) சமூகச் சேவைக் குழுவின் தலைவர் எடலின் தே, எழுச்சி கூட்டத்திற்கு வருகை புரிந்தவர்களை நிகழ்ச்சியின் துவக்கத்தில் வரவேற்று ஆரம்ப ஜெபத்துடன் 2026 அருங்கொடை எழுச்சி கூட்டத்தை அதிகாரப்பூர்வமாக திறந்து வைத்தார்.

"தூய ஆவியே வாரும் உமது மக்களைப் புதுப்பியும்" (திருப்பாடல்.104/30) என்றக் கருப்பொருளின் அடிப்படையில் தூய ஆவியில் திருமுழுக்கின் அர்த்தமும் அதன் விவிலிய அடித்தளமும், அருட்சாதன அருட்கொடைகளின் மறுமலர்ச்சி, அனுதின வாழ்க்கையில் தூய ஆவியை வாழ்தல் ஆகிய தலைப்பில் முதலாவது இறை பகிர்வு நடைபெற்றது.

இதை அடுத்து, தூய ஆவியின் கொடைகள், இயற்கை திறமைகளைக் கண்டறிந்து அருட்கொடைகளைப் புரிந்து கொள்வதல், நற்செய்தி அறிவித்தலுக்கு இந்தக் கொடைகளைப் பயன்படுத்துதல், அருட்கொடைகளை தேர்ந்து தெளிதலும் முதிர்ச்சியும் ஆகியத் தலைப்புகளில் இரண்டாவது பகிர்வு இடம் பெற்றுள்ளது.

மதிய உணவுக்கு பின் மூன்றாவதாக கத்தோலிக்க போதனைபடி குணமளிப்பும், விடுதலையும், (உடல், உள்ளம், ஆன்மிகம் சார்ந்த குணமளிப்பு) திரு அவையின் போதனைக்கு எதிரான தீவிரவாதம், ஆகிய தலைப்புகளில் இறைபகிர்வு நான்கு மொழிகளில் வெவ்வேறு அரங்குகளில் நடைப்பெற்றன.

பல்வேறு அரங்குகளில் இறைப்பகிர்வு நடைபெற்று முடிந்த பின் மீண்டும் அனைவரும் ஆலயத்தில் ஒன்று கூடி நற்கருணை ஆராதனையும் குணமளிக்கும் ஜெபத்திலும் பங்கெடுத்தனர். பின்னர் திவ்ய நற்கருணை ஆராதனைக்காக மக்கள் மத்தியில் பவனியாகக் கொண்டுச் செல்லப்பட்டது.

இறுதியில் கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ் நடத்திய கூட்டுத் திருப்பலியில், எருசலேமில் இருந்து எம்மாவுஸ் நோக்கி சீடர்கள் அன்று பயணித்தனர். இப்போது எம்மாவூசிலேயே நாம் இருந்து விடாமல் மீண்டும் எருசலேம் நோக்கி திரும்பி செல்ல வேண்டும். நம் வாழ்வின் முடிவில்லாத இறுதிக்கட்ட இலக்கு இதுவாக இருக்க வேண்டும் என தமது திருஉரையில் வலியுறுத்தினார்.

அருங்கொடை எழுச்சி கூட்டத்தில் அருட்பணியாளர் பீட்டர் அந்தோணி (கிறிஸ்து ஒளி ஆலயம் கெப்போங்), சிரில் மன்நாயகம் (குருத்துவக் கல்லூரி ஆன்மிக இயக்குனர்), அருட்பணியாளர் லூயிஸ் லோய்(புனித மரியாளின் நய பெயர் ஆலயம்), திரு ஆல்பர்ட் லோ, சிஸ்டர் டுவாரின், சிஸ்டர் லூசினியா ஆகியோர் இறைபகிர்வு செய்தனர்.

இறை புகழ் ஆராதனையில் விசுவாசிகளின் பங்கெடுப்பினால் ஏராளமான ஞான செல்வங்களை, வரங்களை, குணமளிப்பைப் பெற்று ஆவியின் வல்லமையோடு விசுவாசிகள் வீடு திரும்பினர்.

அருங்கொடை எழுச்சி கூட்டத்தின் ஏற்பாட்டு குழு தலைவரும், ஒருங்கிணைப்பாளர் செபஸ்தியன் பிள்ளையின் நன்றி உரையோடு எழுச்சி கூட்டம் ஒரு நிறைவை அடைந்தது.

காரிஸ் பினாங்கு மறைமாவட்ட சமூதாய சேவைக் குழு

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

# இறப்புக்கு பின் ஒருவர் விண்ணகத்தில் உள்ளார் என்று யார் அறிவிக்க முடியும்?

இறைவன் மட்டுமே ஒவ்வொரு மனிதரின் ஆன்மாவையும் இறப்புக்குப் பிறகு தீர்ப்பளிப்பவர். ஆனால் திருஅவை, தூய ஆவியாரின் வழிநடத்தலால், சிலர் புனித வாழ்க்கை வாழ்ந்து இப்போது விண்ணகத்தில் இருக்கிறார்கள் என்பதை அதிகாரப்பூர்வமாக அறிவிக்க முடியும். இந்த அறிவிப்பு புனிதர் அறிவிப்பு (Canonization) என்று அழைக்கப்படுகிறது.

திருவிவிலியம் தெளிவாக சொல்லுவது என்னவெனில், இறைவன் மட்டுமே மனிதனின் இறுதி நீதிபதி என்பதே ஆகும். "மனிதர் ஒரே முறை சாவுக்கு உட்படுகின்றனர். பின்னர் இறுதித் தீர்ப்பு வருகிறது. இதுவே அவர்களுக்கெனவுள்ள நியதி (எபிரேயர் 9:27)." "ஏனெனில் நாம் அனைவருமே கிறிஸ்துவின் நடுவர் இருக்கை முன்பாக நின்றாக வேண்டும். அப்போது உடலோடு வாழ்ந்தபோது நாம் செய்த நன்மை தீமைக்குக் கைம்மாறுபெற்றுக் கொள்ளுமாறு ஒவ்வொருவரின் செயல்களும் வெளிப்படும். (2 கொரிந்தியர் 5:10)."

"எனவே நான் உனக்குக் கூறுகிறேன்; உன் பெயர் பேதுரு; இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா. (மத்தேயு 16:18)." இறந்த ஒருவர் விண்ணகத்தில் இருக்கிறார் என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கும் அதிகாரம் திருத்தந்தைக்கு (றிஷீஜீமீ) உள்ளது. இந்த அதிகாரம் திருஅவைக்கு கிறிஸ்து கொடுத்த அதிகாரத்தின் அடிப்படையில் உள்ளது.

ஒருவர் புனிதராக அறிவிக்கப்படுவதற்கு முன் நீண்ட ஆய்வு மற்றும் விசாரணை நடைபெறும். இந்த நடைமுறை பொதுவாக நான்கு கட்டங்களைக் கொண்டுள்ளது.

**1. Servant of God** (இறைவனுடைய பணியாளர்)

முதலில் அந்த நபரின் வாழ்க்கை மற்றும் புனிதத்தன்மை குறித்து ஆய்வு தொடங்கப்படுகிறது.

**2. Venerable** (மரியாதைக்குரியவர்)

அவர் உயர்ந்த நற்குணங்களுடன் வாழ்ந்தவர் என்று திருஅவை அங்கீகரிக்கிறது.

**3. Blessed** (பாக்கியவான் / பாக்கியவதி)

அவரின் பரிந்துரையால் ஒரு அற்புதம் நிகழ்ந்தது உறுதிசெய்யப்பட்டால் அவர் “Blessed” என்று அறிவிக்கப்படுகிறார்.

**4. Saint** (புனிதர்)

மேலும் ஒரு அற்புதம் உறுதிசெய்யப்பட்ட பின், திருத்தந்தை அவரை உலகளாவிய திருஅவைக்கு புனிதராக அறிவிக்கிறார். இவ்வாறு அறிவிக்கப்பட்டவர்களே மாட்சி பெற்ற அல்லது வெற்றி பெற்ற திருஅவை என்கிறோம்.

இறந்தவர் ஒருவர் விண்ணகத்தில் இருப்பதை உறுதிப்படுத்தும் அடையாளமாக அற்புதங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பொதுவாக, அந்த நபரின் பரிந்துரையால் விளக்க முடியாத குணமடைதல் போன்ற அற்புதங்கள் நிகழ்கின்றன. இந்த அற்புதங்களை மருத்துவர்கள், தத்துவ அறிஞர்கள் மற்றும் திருஅவை பொறுப்பாளர்கள் மிகவும் கவனமாக ஆய்வு செய்கிறார்கள். கத்தோலிக்க திருஅவை புனிதர்களின் உறவு ஒன்றிப்பின் (Communion of Saints) என்ற போதனையை கற்பிக்கிறது. விண்ணகத்தில் இருக்கும் புனிதர்கள் மண்ணகத்தில் வாழும் நம்பிக்கையாளருக்காக இறைவனிடம் பரிந்துரைக்கிறார்கள்.

பலர் தங்கள் அன்புக்குரியவர் இறந்தபின் “அவர் விண்ணகத்தில் இருக்கிறார்” என்று நம்பிக்கையுடன் சொல்வார்கள். ஆனால் திருஅவை அதிகாரப்பூர்வமாக இப்படிப் பேசுவது புனிதர்களுக்கு மட்டும் தான்.

இதனால் கத்தோலிக்கர்கள் இறந்தவர்களுக்காக இறைவேண்டல் செய்ய ஊக்கப்படுத்தப்படுகிறார்கள், ஏனெனில் சில ஆன்மாக்கள் உத்தரிக்கிற நிலையில் (Purgatory) இருக்கக்கூடும்.

இதன் நோக்கம் அந்த புனிதர்களை மதிப்பதற்காக மட்டுமல்ல; அவர்கள் வாழ்ந்த நம்பிக்கை வாழ்க்கையை எடுத்துக்காட்டாக வைத்து, நாமும் நய வாழ்க்கையை வாழ ஊக்கமளிப்பதாகும்.

அருட்பணி வின்சண்ட் தோமஸ்
உரோமை, இத்தாலி

# பொதுக்காலம் 13ஆம் வாரம் – ஞாயிறு

**முதல் வாசகம்: 2 அரசர் 4:8-11, 14-16**
**இரண்டாம் வாசகம்: உரோமையர் 6:3-4, 8-11**
**நற்செய்தி: மத்தேயு 10: 37-42**

## சிறிய அன்புச் செயல்கள் பெரிய வெகுமதிக்கானது!

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 13 ஞாயிறு. இன்றைய முதல் வாசகத்தில் இறைவனுடைய ஊழியர்களை அன்புடனும் நம்பிக்கையுடனும் ஏற்றுக்கொள்பவர்களை இறைவன் ஆசீர்வதிக்கிறார் என்றும் தாராள மனமும் விருந்தோம்பலும் இறைவனின் அருளையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுத் தருகின்றன என்று நமக்கு நினைவூட்டப்படுகிறது.

அடுத்து வரும் இரண்டாம் வாசகத்தில், பவுல் அடிகள், திருமுழுக்கின் மூலம் கிறிஸ்துவோடு இணைந்த நாம், பாவ வாழ்வை விட்டு விலகி, உயிர்த்தெழுந்த ஆண்டவரோடு புதிய வாழ்வில் நடக்க வேண்டும் என்று அழைப்பு விடுகிறார்.

நற்செய்தியிலோ, கிறிஸ்துவை எல்லாவற்றிற்கும் மேலாக அன்புசெய்து, தியாக மனப்பான்மையுடன் அவரைப் பின்பற்றுவதோடு பிறருக்கு அன்போடு சேவை செய்வதானது நாம் கொண்டிருக்கும் சீடத்துவத்திற்கான உண்மையான அடையாளங்கள் என்று மத்தேயு எடுத்துரைக்கிறார்.

தந்தை, தாய், மகன் அல்லது மகளை விடவும் மேலாக, நாம் கடவுளை அன்பு செய்திட வேண்டும். கடவுள் மீதான அன்பையும் குடும்பத்தின் மீதான அன்பையும் வேறுபடுத்திக் காட்டுவதன் மூலம், இயேசு குடும்பப் பாசத்தைக் குறைத்து மதிப்பிடவில்லை; மாறாக, மற்றவர்களை உண்மையாக அன்பு செய்வதற்கான ஒரே வழி, முதலில் கடவுளை அன்பு செய்வதுதான் என்பதை அவர் வெளிப்படுத்துகிறார். அன்றாட வாழ்வில், நமது பெற்றோரையும் பிள்ளைகளையும் அன்பு செய்வது இயல்பானது. கடவுள் நம்மை இந்த அன்பு ஊறவுகள் மத்தியில் படைத்துள்ளார். விலங்குகள் கூட உள்ளுணர்வாகத் தங்கள் குட்டிகளைப் பராமரிக்கின்றன. ஆனால் இயேசுவோ, வெறும் உணர்ச்சிப்பூர்வமான பற்று அல்லது கடமையைக் கடந்து, தெய்வீக அன்பினால் முழுமையான ஓர் உயர்ந்த அன்பிற்கு நம்மை அழைக்கிறார். அவருடைய போதனை இயல்பான அன்பை மறுப்பதில்லை; மாறாக, அது அதனைத் தூய்மைப்படுத்தி, உயர்த்தி, மிக உயர்ந்த நன்மையாகிய கடவுளையே நோக்கி வழிநடத்துகிறது என்பதாக நமது புரிதல் இருக்க வேண்டும்.

நாம் முதலில் கடவுளை அன்பு செய்யும்போது, நமது எல்லா உறவுகளும் தூய்மையாக்கப்படுகிறன. மற்றவர்களை மனிதப் பாசத்தால் மட்டும் அன்பு செய்வதற்குப் பதிலாக, கடவுளின் அன்பாலேயே அவர்களை பாரபட்சமற்ற அன்பு செய்வோம். நமது அன்பானது உணர்ச்சிபூர்வமானதாக இல்லாமல், தெய்வீக அன்பாக மாற்றம் காணும் என்பதை மனதில் கொள்வோம். கடவுளே தூய அன்பின் பிறப்பிடம். அந்த அன்பு நம்மில் ஊற்றெடுக்க நம்மை அவரது அன்பிற்கு முழுமையாகக் கையளிக்க வேண்டும். உலகம் தராத அன்பை தருபவர் நம் ஆண்டவர் மட்டுமே.

ஆர்.கே.சாமி, சிரம்பான்

உங்களின் கட்டுரைகள், கருத்துக்கள், பகிர்வுகள், பங்குச் செய்திகளை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம். 400-500 சொற்களுக்குள் அமைந்த கட்டுரைகள், அவற்றுக்கான விளக்கக் குறிப்புகளுடன் (caption) கூடிய உயர் தெளிவுத்திறன் (HD) கொண்ட JPG அல்லது PNG வடிவத்திலான புகைப்படங்கள் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்களது கட்டுரைகளை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி வைக்கலாம்:
மின்னஞ்சல்: tamil@herald.com.my வாட்ஸ்அப்: 012-5599015